செ.வெ.எண்: 763/ 2016 நாள்: 26.10.2016

**பத்திரிக்கை செய்தி**

**கன்னியாகுமரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடர்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அறிக்கை.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழை முன்னேற்பாடுகள் தொடர்பாக மாவட்ட நிலை அலுவலர்களுக்கான கூட்டம் நடத்தப்பட்டு, பாதிப்பு ஏற்பட வாய்ப்புகள் உள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் சம்பந்தமாக தக்க அறிவுரைகள் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதோடு பாதிப்பு ஏற்படும் பொழுது உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் சம்பந்தமாகவும் அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு பருவமழை தொடர்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கண்காணித்து ஒருங்கிணைப்பதற்காக, மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் ஒருங்கிணைப்பு அலுவலர் குழு, மண்டல அலுவலர் குழு, ஆரம்ப எச்சரிக்கை குழு, தேடுதல் மற்றும் மீட்பு/வெளியேற்றுதல் குழு, தங்குமிடம் மற்றும் நிவாரணம் வழங்கும் குழு, நீர் வழிகளில் ஆக்கிரமிப்பு அகற்றும் குழு, பொது சுகாதார குழு, போக்குவரத்து மேலாண்மை குழு, ஊடக மேலாண்மை குழு, மண்டல அணி குழு, மீட்பு குழு மற்றும் முதல் உதவியாளர்கள் (First Responders) குழு என பல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி குழு உறுப்பினர்களுக்கு வடகிழக்கு பருவமழையின் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி குழுவினர் மூலமாக மீட்பு நடவடிக்கைகள் உடனுக்குடன் மேற்கொள்ளவும், பாதுகாப்பான பகுதியில் பாதிக்கப்பட்ட பொதுமக்களை தங்க வைக்கவும் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் மாவட்டத்தில் 155 குளங்கள் & சானல்கள் மற்றும் 474 ஆற்றுப்படுகைகள் & வாய்க்கால்கள் சம்மந்தப்பட்ட துறையினர் மூலமாக தூர் வாரப்பட்டுள்ளது. மேலும் 2479 சிறுபாலங்கள், 118 பாலங்களின் கீழ் சுத்தப்படுத்தப்பட்டு தண்ணீர் தங்கு தடையின்றி செல்ல வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் வடகிழக்கு பருவமழையின் போது வெள்ளப்பெருக்கு ஏற்பட்டாலோ அல்லது பேரிடர் மேலாண்மை தொடர்பாக வேறு ஏதேனும் உதவிகள் தேவை ஏற்பட்டாலோ 24 மணி நேரமும் இயங்கும் மாவட்ட அவசர கால உதவி மையத்தில் கட்டணமில்லா தொலைபேசி எண்.1077 -இல் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். மேலும் 04652-279090 மற்றும் 04652-279091 மூலம் மாவட்ட நிர்வாகத்திற்கு தகவல் தெரிவிக்கலாம்.

மேலும் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு தொடர்பாக மாவட்டத்தில் உள்ள முக்கிய அணைகளான பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகள் 26-10-2016 இன்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ஆர்.சவான் நேரடியாக ஆய்வு செய்தார். பெருஞ்சாணி அணையில் நடைபெற்று வரும் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகள் தரமானதாகவும்

விரைந்து முடிக்கவும் அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது. மேற்படி ஆய்வின் போது பொதுப்பணித்துறை நீர் வள ஆதார அமைப்பு செயற் பொறியாளர் மற்றும் பொறியாளர்கள் அலுவலர்கள் உடனிருந்தனர்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.